# சிறப்பு சார்பு நீதிமன்றம் (LAOP) எண்.2 , ஜெயங்கொண்டம்

| | | | |
|---|---|---|---|
| வழக்கு | : OS.342/2024 | கிராமம் | : ரெட்டி தத்தூர் |
| சாட்சி | : பி.வா.சா–1 | வட்டம் | : ஆண்டிமடம் |
| பெயர் | : தங்கப்பன் | வயது | : 72 |
| த/பெ | : ராஜமாணிக்கம் | தொழில் | : விவசாயம் |

2026–ம் ஆண்டு ஆகஸ்ட் 13–ஆம் நாள் (1969–ம் ஆண்டு 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.தனஞ்செயன், கிரேடு–II பெஞ்ச் கிளர்க் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் பிரதிவாதி. பி.வா.சா.1 ஆக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை என்னுடைய முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன். இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது. அதில் சொல்லப்பட்ட விவரங்களை நான் படித்துப்பார்த்து சரி என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டு நான் என்னுடைய கையொப்பங்களை இட்டேன். கீழ்கண்ட ஆவங்களை எனது தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்யவேண்டி பிரார்த்திக்கிறேன்.

1. 24.10.1977 தேதியிட்ட என்னுடைய தந்தைக்கு அந்தோணி ஜோசப் எழுதிக் கொடுத்த கிரயப் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.1.

2. 03.12.1979 தேதியிட்ட என்னுடைய தந்தை பெயரில் உள்ள கிரயப் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.2.

3.30.10.1980 தேதியிட்ட எனது தந்தைக்கு வீராசாமி சாபாபதி ஆகியோர்கள் எழுதிக்கொடுத்த கிரயப் பத்திரத்தின் அசல் பி.வா.சா.ஆ.3.

4.28.06.1985 தேதியிட்ட எனது பெயரில் உள்ள பட்டா பி.வா.சா.ஆ.4.

5. 18.05.2004 தேதியிட்ட எனது பெயரில் உள்ள கணிணி பட்டா பி.வா.சா.ஆ.5.

6. 1414 பசலி ஆண்டுக்கான எனது பெயரில் உள்ள அடங்கல் கணக்கு நகல் பி.வா.சா.ஆ.6.

7. இந்த நீதிமன்றத்தில் IA.3/2025-ல் 2ம் வாதி தாக்கல் செய்த அபிடவிட் மற்றும் மனுவின் சான்றிட்ட நகல் பி.வா.சா.ஆ.7.

**வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் வைத்து சாட்சி சொன்னவை என்னால் தட்டச்சருக்கு திருப்பி சொல்லப்பட்டு அவரால் தட்டச்சிடப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

/ ஒப்பம் / V. பிரேம்குமார்,
சிறப்பு நீதிபதி எண்.2,
ஜெயங்கொண்டம்.